# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப் படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம்

*(2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2014, ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 50.00**

***2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம்***

[*2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. - ஓ. 23/2013*

***வெளிநாட்டவருக்கும், வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் மற்றும் வெளிநாட்டுப் பங்குகளை வைத்திருக்கும் குறித்தசில நிறுவனங்களுக்கும் இலங்கையிலுள்ள காணிகளின் பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகளை வலியுறுத்துவதற்கும் விலக்களிப்புகள் அளிக்கப்படவுள்ள சூழ்நிலைகளை குறித்துரைப்பதற்கும் ; வெளிநாட்டவர்கள், வெளிநாட்டுக் கம்பெனிகள் மற்றும் வெளிநாட்டுப் பங்குகளை வைத்திருக்கும் குறித்தசில நிறுவனங்களுக்கு காணிகளை குத்தகைக்கு விடுவதற்கான காணிக் குத்தகை வரி ஒன்றை விதிப்பதற்கும் ; குறித்தசில அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு சலுகைகள் அளிப்பதற்கும் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் VI ஆம் பாகத்தினை நீக்குவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*உலகளாவிய ரீதியில் ஒன்றிணைக்கப்பட்ட சூழல் ஒன்றின் பின்னணியில் அரசாங்கத்தினால் மேம்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கொள்கைகளின் முன்னெடுத்துச் செல்லலில் தேசிய நலனை பேணுகின்றதான முறை ஒன்றில் வரையறுக்கப் பட்ட வளமொன்றாகவுள்ள காணியின் புத்திசாலித்தனமான பயன்படுத்தலை உறுதிப்படுத்தல் உசிதமானதாகவும் அவசியமானதாகவும் கருதப்படுகின்றதாதலாலும் :* *முன்னுரை.*

*அத்துடன் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக வெளிநாட்டவருக்கும், வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் மற்றும் வெளிநாட்டுப் பங்குகளை வைத்திருக்கும் குறித்தசில நிறுவனங்களுக்கும் காணிகளைப் பராதீனப்படுத்தலின் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றதாகவும் குறித்தசில அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக இலங்கைப் பிரசைகளுக்கு சலுகைகள் அளித்துள்ளதாகவும் நிலைத்திருக் கக்கூடிய முறை ஒன்றில் காணிப் பயன்படுத்தலை ஒழுங்கு படுத்துவது தேசிய கொள்கையாக இருக்கின்றதாதலாலும் :*

ஆகவே, இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

**1.** (1) இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2013 ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுமாறு நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

காணிக் கைமாற்றத்தின் மீதான மட்டுப்பாடுகள்.

**2.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக ஏதேனும் ஏற்பாடு எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் அமைந்துள்ள ஏதேனும் காணியின் உரித்துக் கைமாற்றமானது, அத்தகைய கைமாற்றம் :-

(அ) வெளிநாட்டவர் ஒருவருக்கென இருந்தால் ; அல்லது

(ஆ) கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக் கப்பட்ட கம்பெனியில் எவையேனும் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையானது ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேலுள்ளவிடத்து, அத்தகைய கம்பெனி ஒன்றுக் கென இருந்தால் ; அல்லது

(இ) வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றுக்கென இருந்தால்,

3 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு விலக்களிக்கப்பட்டி ருந்தாலன்றி, தடை செய்யப்படுதல் வேண்டும்.

(2) (அ) வெளிநாட்டு பங்கு வைத்திருக்கையின் ஐம்பது சதவீதத் திற்கு குறைவாகக் கொண்டுள்ள கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றிற்கான காணி யின் கைமாற்றத்தின் சட்டரீதியான செல்லுபடியான தன்மை யினைப் பேணுகின்ற நோக்கத்திற்காக, அத்தகைய கம்பெனியின்

வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையானது, அத்தகைய கைமாற்றத் தேதியிலிருந்து குறைந்தபட்சம் தொடர்ச்சியான இருபது (20) ஆண்டு காலப்பகுதி ஒன்றிற்கு ஐம்பது சதவீதத்திற்கு குறைவாக நீடித்திருத்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையானது -

(i) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பங்குகளின் சொத்தாண்மை மாற்றத்தின் விளைவாக ; அல்லது

(ii) அத்தகைய கம்பெனியின் பங்குதாரரொருவர் இறப்பதன் மேல் இறந்துள்ள பங்குதாரரின் பங்குகள் இலங்கையில் வழியுரிமைக்கு ஏற்புடைத்தான சட்டங்களுக்கு இணங்க, வெளிநாட்டவர் ஒருவராக இருக்கின்ற நெருங்கிய உறவினர் மீது வந்தடைவதன் விளைவாக,

பந்தி (அ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ஐம்பது சதவீதத்தை எய்துகின்றவிடத்து அல்லது விஞ்சுகின்றவிடத்து அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட காணி ஒன்றின் கைமாற்றம் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையின் அதிகரிப்புத் தேதியில் இருந்து வறிதாதல் வேண்டும் என்பதுடன், சட்டத்தில் பயன் எதுவும் இல்லாதிருத்தலும் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும் -

(i) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று (திரி சவி அறிவிப்புப் பலகையில் விடயத்தின் ஆகக்குறைந்தது இருநூறு பங்குதாரர்களும் மற்றும் பிரதான அறிவிப்புப் பலகையின் விடயத்தில் ஆயிரம் பங்குதாரர்களும் உடையதான) வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையின் அதிகரிப்புத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதி ஒன்றினுள் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாக வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கின்றவிடத்து ; அல்லது

(ii) உட்பந்தி (i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனி தவிர்ந்த, கம்பெனி ஒன்று பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அதனது வெளிநாட்டுப் பங்கு வைத் திருக்கையின் அதிகரிப்புத் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதி ஒன்றினுள் ஐம்பது சதவீதத்திற்கு குறை வாக வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையைக் குறைப் பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றவிடத்து ,

இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட காணியின் கைமாற்றமானது, அத்தகைய கம்பெனியின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையை ஐம்பது சதவீதத்துக்குக் குறைவாக மீட்டுப்பெற்ற தேதியிலிருந்து சட்டரீதி யாகச் செல்லுபடியானதாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''திரி சவி அறிவிப்புப் பலகை'' மற்றும் ''பிரதான அறிவிப்புப் பலகை'' என்னும் சொல் லமைப்புக்கள், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு திசெம்பர் 18 ஆந் தேதிய 1215/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2001 ஆம் ஆண்டின் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளின் நியதிகளின்படி, கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் நிரற்படுத்தல் தேவைப்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட அதன் நிரற்படுத்தல் விதி களின் ஏற்பாடுகளுக்கிணங்க வாசித்துப் பொருள்கொள்ளப்படு தல் வேண்டும்.

*இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையில் இருந்து விலக்களித்தல்.*

**3.** (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள், -

(அ) இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் வேறொரு அரசின் தூதுக்குழு ஒன்றிற்கு அல்லது அச்சட்டத்தின் நியதிகளின்படி அங்கீகரிக்கப் பட்ட சர்வதேச பல்பக்க அல்லது இருபக்க ஒழுங் கமைப்பு ஒன்றிற்கு எந்தக் காணியின் உரித்து கைமாற் றப்பட்டிருக்கின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(ஆ) (இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பொதுவான மூலக்கூற்றை அல்லது மூலக்கூற்றுக்களை மட்டும் கொண்டிருக்கின்ற நிலத்தளம் மற்றும் தளங்கள் நீங்கலாக) இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றின் நான்காவது தளத்தில் அல்லது அதற்கு மேலுள்ள கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு ஒன்றிற்கு :

ஆயின், முழுமொத்தப் பெறுமதி இயைபான கைமாற்ற உறுதியின் நிறைவேற்றத்திற்கு முன்னதாக உள்வரும் வெளிநாட்டுப் பண அனுப்புதல் ஒன்றினூடாக முகப்பனவில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(இ) 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வரிப் பட்டியலை ஆளுகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட அத்தகைய முதலீட்டுடன் தொடர்புபட்ட உடன்படிக்கைகளின்படி வெளிநாட்டு நாணயத்தின் நேரடி முதலீட்டுடன் தொடர்புபடுகின்றதும் 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிபு ஒன்றின் விளைவானதும் மற்றும் இலங்கைக்கு உள்வரும் பண அனுப்புகையை செய்வதன் மூலம் இணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்தியுள்ளதும் ஆன வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கு எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(ஈ) இலங்கையில் வழியுரிமை ஏற்புடையற்பாலதான சட்டத்திற்கிணங்க (வெளிநாட்டவர் ஒருவராக இருக்கின்ற) அத்தகைய காணியின் உரிமையாளரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு மரணசாசனமின்மை மூலம், கொடை மூலம் அல்லது மரணசாசன ஆதனவளிப்பு மூலம் எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(உ) பிரசாவுரிமைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் இலங்கையின் இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட பிரசை ஒருவருக்கு எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்பட்டிருக்கின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(ஊ) வங்கித் தொழிற் சட்டத்தின்கீழ் எந்த உரிமமளிக்கப்பட்ட வங்கியில் ஏதேனும் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை ஐம்பது சதவீதம் அல்லது அதற்குமேல் உள்ளதோ அந்த வங்கிக்கு -

(i) காணியின் ஈட்டுக்கடன் ஒன்றின் பொறுப்பு விடுத்தலில் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் - (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளின்படி அல்லது ஈட்டுக்கடன் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வங்கியினால் நடாத்தப்பட்ட ஏலவிற்பனையில் ;

(ii) அத்தகைய வங்கியினால் கொடுக்கப்பட்ட கடன் ஒன்றின் அறவீட்டை வலுவுக்கிடுவதற்கு நீதிமன்றத் தீர்வை ஒன்றை நிறைவேற்றுவதில்,

எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(எ) எந்த நிதிக்குத்தகைக்கு விடுதல் நிறுவனத்தில் ஏதேனும் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை ஐம்பது சதவீதம் அல்லது அதற்குமேல் உள்ளதோ அந்த ஏதேனும் நிதிக் குத்தகைக்கு விடுதல் நிறுவனத்திற்கு -

(i) ஏதேனும் காணி குத்தகை ஒன்றுக்கு பிணைப் பொறுப்பொன்றாக அத்தகைய நிதிக் குத்தகைக்கு விடுதல் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்டிருக்குமிடத்து ;

(ii) குத்தகையொன்றையும் விற்பதற்கான உடன்படிக்கையும் அல்லது கடனொன்றையும் விற்பதற்கான உடன்படிக்கையொன்றையும் நிறைவேற்றும் நோக்கில் ;

(iii) அத்தகைய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடனொன்றின் மீளப்பெறுகையை நடைமுறைப் படுத்துவதற்கு நீதிமன்றத்தின் தீர்வை ஒன்றின் நிறைவேற்றத்தில்,

எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு ;

(ஏ) 2013 சனவரி 1 ஆந் தேதி தொடங்கி இச்சட்டம் தொடர்பில் எந்தத் தேதியன்று சபாநாயகரின் சான்றிதழ் புறக் குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியன்று முடியும் காலப்பகுதியின்போது ஏதேனும் காணியின் கைமாற்றத் தேதிக்கு முன்னரான பத்து (10) தொடர்ச்சியான ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய கம்பெனி முனைப்பான தொழிற்பாட்டில் இருந்திருப்பின், 2(1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றிற்கு எந்தக் காணியின் உரித்துக் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஏதேனும் காணிக்கு,

ஏற்புடையதாதல் ஆகாது.

(2) அமைச்சர், எவ்வமைச்சருக்கு காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடனும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங் காணப்பட்ட வங்கித் தொழில், நிதி, காப்புறுதி, கடல்சார், வான்செலவு, உயர்தர தொழில் நுட்பவியல் அல்லது உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வெளிநாட்டு உருவகத்தை 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கலாம்.

(3) அமைச்சர், எவ்வமைச்சருக்கு காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடனும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் காணியானது உலகளாவிய ரீதியில் அல்லது பிராந்திய தொழிற்பாடுகளிற்கு அமைவிடம் அளிப்பதற்கு அல்லது மீள அமைவிடம் அளிப்பதற்கு அல்லது கிளை அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்கு கொள்வனவு செய்யப்படுகின்றவிடத்து, 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து சர்வதேச வர்த்தக தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வெளிநாட்டுக் கம்பெனிக்கு விலக்களிக்கலாம்.

*(4)* காணி ஒன்றின் கைமாற்றமானது இப்பிரிவின் நியதிகளின் படி பயனுறுத்தப்படுமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய காணியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் ஒவ்வோர் அடுத்துப்பின்னரான உரித்துக் கைமாற்றம் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

*காணிகளின் உரித்து கைமாற்றம் தொடர்பான சாசனங்களைப் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்.*

**4.** *(1)* காணிகள் பதிவாளர், ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உரித்துக் கைமாற்றத்தைச் செய்கின்ற சாசனத்தை அத்தகைய கைமாற்றம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுகின்றதென அத்தகைய காணிகளின் பதிவாளர் திருப்திப்பட்டிருந்தாலன்றி, பதிவு செய்தலாகாது.

*(2)* (அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், அத்தகைய காணியின் சொந்தக்காரரின் (வெளிநாட்டவர் ஒருவராக இருக்கின்ற) நெருங்கிய உறவினர் ஒருவருக்கு காணியொன்றின் உரித்தைக் கைமாற்றம் செய்கின்ற சாசனமொன்று, கைமாற்றிப் பெறுபவர், இலங்கையில் வழியுரிமைக்கு ஏற்புடைத்தான சட்டங்களினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கைமாற்றப்பட்ட காணிச் சொந்தக் காரரின் நெருங்கிய உறவினராக இருக்கின்றாரென அத்தகைய சாசனக் கைமாற்றத்தினை அத்தாட்சிப்படுத்துகின்ற பிரசித்த நொத்தாரிசு அவருடைய அத்தாட்சிப்படுத்தலில் சான்றுப்படுத்துகின்றவிடத்து, காணிப்பதிவாளரினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளொருவர் காணிச் சொந்தக்காரரின் நெருங்கிய உறவினராக இருக்கின்றாரா அல்லது எந்தச் சட்டம் வழியுரிமைக்கு ஏற்புடையதாக இருக்கின்றது என்பது தொடர்பாக ஏதேனும் வினா எழுகின்றவிடத்து காணிப்பதிவாளர் சுருக்கமுறை வழக்கு நடவடிக்கை மூலமான தீர்மானம் ஒன்றுக்கென, இயைபான காணி எந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அந்தப் பிரதேசத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விடயத்தை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(3) காணியின் உரித்தானது, வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையினை ஐம்பது சதவீதத்திற்கு குறைவாக கொண்டுள்ள கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றிற்குக் கைமாற்றப்படுகின்றவிடத்து, அத்தகைய கம்பெனியின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை அப்போதைக்கு வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாக உள்ளதென்ற பொருள்படுகின்ற ஆவண எண்பிப்பைச் சமர்ப்பிப்பதற்கு அத்தகைய கம்பெனியின் கம்பெனிச் செயலாளரைத் தேவைப்படுத்துவதன் மூலம் அத்தகைய கம்பெனியின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாக உள்ளதென உறுதிப்படுத்துதல் காணிகள் பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) (அ) அத்தகைய கம்பெனியின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை சொல்லப்பட்ட ஆறு மாதக் காலப்பகுதியின்போது அத்தகைய கம்பெனியினால் வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாதுள்ளது என இயைபான கம்பெனிச் செயலாளர் இயைபான கைமாற்றல் உறுதியின் பதிவுத் தேதியிலிருந்து ஒவ்வோர் ஆறு மாத காலப் பகுதிக்குள்ளும் காணிகள் பதிவாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை ஐம்பது சதவீதத்தை எய்துகின்றவிடத்து அல்லது விஞ்சுகின்றவிடத்து, இயைபான காணிகள் பதிவாளர், இயைபான பக்கத்தில் அப்பொருள்படுகின்ற குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''காணிப் பதிவாளர்'' என்பது, எந்தக் காணிப் பதிவகத்தின் காணிப் பதிவாளருக்கு பதிவுசெய்தலுக்காக கைமாற்றல் சாசனம் சமர்ப்பிக்கப்படுகின்றதோ, அந்தக் காணிப் பதிவகத்தின் முறையான காணிப் பதிவாளர் எனப் பொருள்படும்.

வெளிநாட்டவர்களுக்கு காணிகள் குத்தகைக்கு விடுதல் மீதான மட்டுப்பாடுகள்.

**5**. (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏதேனும் ஏற்பாடு முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், காணி ஒன்றை -

(அ) வெளிநாட்டவர் ஒருவருக்கு ; அல்லது

(ஆ) அத்தகைய கம்பெனியில் ஏதேனும் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கையானது ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஐம்பது சதவீதம் அல்லது அதற்குமேல் கொண்டுள்ளதான கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றிற்கு ; அல்லது

(இ) வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றிற்கு,

குத்தகைக்கு விடுதலானது 6 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட காணிக்குத்தகை வரிக் கொடுப்பனவிற்கு அமைவாகச் செய்யப்படுதல் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் குத்தகையின் ஆகக்கூடிய குத்தகைக் காலம் தொண்ணூற்றொன்பது வருடங்களை விஞ்சுதலாகாது.

(2) அவ்வாறு குத்தகைக்குவிடப்பட்ட ஏதேனும் அரச காணி, குத்தகைக் காலம் கடந்து செல்வதன் மீது, வில்லங்கள் இன்றி அரசுக்கு மீள உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் அரச காணி, இயைபான குத்தகை ஒப்பந்தத்தின் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது எவ்வமைச்சருக்கு காணி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரிடமிருந்து எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறாமல் கீழ் வாடகைக்கு அல்லது கீழ்க் குத்தகைக்கு விடப்படுதலாகாது.

வெளிநாட்டவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் மீது வரி விதித்தல்.

**6**. (1) ஏழாம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, குத்தகை ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்றுகையில் அல்லது அத்தகைய நிறைவேற்றுகைக்கு முன்னராக, 5(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒவ்வொரு காணிக் குத்தகைக்குமாக குத்தகைக்கு எடுத்தவரால் முகப்பளவில் காணிக் குத்தகை வரி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) அத்தகைய காணிக் குத்தகை வரி வீதம், குத்தகையின் முழுக் காலப்பகுதிக்குமாக செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் பதினைந்து சதவீதம் ஆதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும், காணிக் குத்தகையானது பின்வருவன தொடர்பில் குத்தகையின் முழுக் காலப்பகுதிக்கும் செலுத்தப்படற்பாலதான மொத்த வாடகையின் 7.5 சதவீதமாதல் வேண்டும் -

(அ) பிரிவு 5(1) (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கம்பெனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணி ; ஆயினும் அத்தகைய கம்பெனி ஒப்பந்தத் தேதிக்கு உடன் முன்னர் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத தொடர்ச்சியான காலப்பகுதி ஒன்றிற்கு இலங்கையில் முனைப்புடன் தொழிற்பட்டுக் கொண்டிருந்ததாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கொளிக்கம்பெனி ஒன்றின் எந்தத் துணை நிலைக் கம்பெனியால் பங்கு வைத்திருக்கையானது ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேலாகவும் அத்துடன் கொளிக் கம்பெனியின் ஏதேனும் வெளிநாட்டுப் பங்கு வைத்திருக்கை ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேலாகவும் உள்ளதோ அந்த துணைநிலைக் கம்பெனி ஒன்றிற்கு குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணி , ஆயினும் அத்தகைய கொளிக் கம்பெனி குத்தகை ஒப்பந்தத் தேதிக்கு உடன் முன்னர் பத்து (10) ஆண்டுகளுக்குக் குறையாத தொடர்ச்சியான காலப்பகுதி ஒன்றிற்கு இலங்கையில் முனைப்புடன் தொழிற்பட்டுக் கொண்டிருந்ததாகவிருத்தல் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும், துணை நிலைக் கம்பெனியில் கொளிக் கம்பெனியின் பங்கு வைத்திருக்கையானது ஐம்பது சதவீதத்திற்கு குறைவாக வருமிடத்து, அத்தகைய குத்தகை தொடர்பில் ஏற்புடையற்பாலதான காணிக் குத்தகை வரியானது பங்கு வைத்திருக்கையின் குறைப்புத் தேதியில் இருந்து பயனுறும் வகையில் மீதிக் குத்தகைக் காலப்பகுதிக்கு பதினைந்து சதவீதமாதல் வேண்டும் ;

(இ) குத்தகைக் காலப்பகுதி முப்பத்தைந்து ஆண்டுக்குக் குறைவாக இருக்குமிடத்து, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டிடமொன்றின் நான்காவது தளத்தில் அல்லது அதற்கு மேலே அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு ;

(ஈ) குத்தகைக் காலப்பகுதி தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்கு மேற்படாதிருக்குமிடத்து, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றின் நான்காவது தளத்திற்கு கீழே அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனச் சிறு கூறு ;

(உ) ஐந்தாம் பிரிவின் நியதிகளின்படி பின்வருவனவற்றினுள் அமைந்துள்ள ஏதேனும் காணியின் குத்தகை -

(i) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட உரிமம்பெற்ற இடப்பரப்பு ஒன்று ; அல்லது

(ii) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் அல்லது 1968ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலாப் பயண அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட சுற்றுலாப் பயணிகள் அபிவிருத்தி இடப்பரப்பு ஒன்று ; அல்லது

(iii) *1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கைத்தொழில் பேட்டை ஒன்று ; அல்லது*

(iv) *எந்த இடப்பரப்புக்கு குறைக்கப்பட்ட வரிவீதம் ஏற்புடையற்பாலதாக இருக்கின்றதோ அந்த இடப்பரப்பொன்றாக ஒழுங்குவிதிகளால் அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பு ஒன்று ;*

(ஊ) *தொடர்புபட்ட துறையினுள் அத்தகைய கம்பெனியினால் கணிசமானளவு வெளிநாட்டு முதலீடு ஏலவே தேறிப் பெறப்பட்டுள்ளதென்பதைக் கவனத்திற் கொண்டதன் பின்னர், அத்தகைய குறைக்கப்பட்ட வரிவீதம் தொடர்புபட்ட துறையில் அதன் போட்டியாளர்களுடன் ஒரு மட்டமான செயற்பாட்டு முறையை உறுதிப்படுத்துவதற்கென நியாயப்படுத்தக்கூடியதாகவுள்ளதென அமைச்சரவை முடிபு செய்யுமிடத்து 5 (1) (ஆ) என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கம்பெனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணி.*

*(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குத்தகைக்கு எடுத்தவர், காணிக் குத்தகை வரிக்கு மேலதிகமாக, 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின்கீழ் ஏற்புடையற்பாலதான முத்திரைத் தீர்வையையும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் கீழ் அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வேறு ஏதேனும் வரியையும் அல்லது விதிப்பனவையும் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.*

*(5) காணிக் குத்தகை வரியானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*காணிக் குத்தகை வரியிலிருந்து விலக்களித்தல்.*

**7.** (1) ஆறாம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான காணிக் குத்தகை வரியானது பின்வருவனவற்றின் குத்தகை மீது ஏற்புடைய தாக்கற்படற்பாலனவாதலாகாது –

(அ) இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் வேறொரு அரசின் தூதுக்குழுவிற்கு அல்லது அச்சட்டத்தின் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பல்பக்க அல்லது இருபக்க ஒழுங்கமைப்பு ஒன்றிற்கான ஏதேனும் காணிக்கு ;

(ஆ) குத்தகைக் காலப்பகுதி முப்பத்தைந்து வருடங்கள் அல்லது அதற்கு மேலாக இருக்கின்றவிடத்தும் குத்தகையின் முழுக் காலப்பகுதிக்குமான குத்தகை வாடகையானது குத்தகையின் இயைபான ஒப்பந்த உத்தரவாதமுறியின் நிறைவேற்றத் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் வெளிநாட்டு நாணய உள்வரும் பண அனுப்புதல் மூலம் செலுத்தப்படுகின்ற விடத்தும் (இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் பொதுவான மூலக்கூறை அல்லது மூலக்கூறுகளைக் கொண்டி ருக்கின்ற நிலத்தளம் மற்றும் தளங்கள் நீங்கலாக) இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்துரைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றின் நான்காவது தளத்தில் அல்லது அதற்குமேல் உள்ள தளத்தில் அமைந்துள்ள கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு ஒன்றிற்கான ஏதேனும் காணிக்கு ;

(இ) பிரசாவுரிமைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் இலங்கையின் இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட வருக்கான ஏதேனும் காணிக்கு ;

(ஈ) 2013 சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னதான வரிப்பட் டியலை ஆளுகின்ற ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அடிப்படைமீது கட்டமைக்கப்பட்டதும் முதலீட்டுடன் தொடர்புபட்ட உடன்படிக்கைகளின்படி வெளிநாட்டு நாணயத்தின் நேரடி முதலீட்டுடன் சம்பந்தப்

படுகின்றதும் 2013 சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னதாக எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் விளைவானதும் மற்றும் இலங்கைக்கு உள்வரும் வெளிநாட்டுப் பண அனுப்புதலைச் செய்வதன்மூலம் இணங்கி ஒழுகுதலை உறுதிப்படுத்தியுள்ளவருமான வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கான காணிக்கு ;

(உ) 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பிணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றினுள் அல்லது சுதந்திர துறைமுகம் ஒன்றினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிக்கு.

(2) அமைச்சர், எவ் அமைச்சருக்கு காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங்காணப்பட்ட வங்கித் தொழில், நிதி, காப்புறுதி, கடல்சார், வான்செலவு, உயர்தரத் தொழினுட்பவியல் அல்லது உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வெளிநாட்டு உருவகத்தை 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கலாம்.

(3) அமைச்சர், எவ்வமைச்சருக்கு காணிகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருடனான கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் காணியானது உலகளாவிய ரீதியில் அல்லது பிராந்திய தொழிற்பாடுகளிற்கு அமைவிடம் அளிப்பதற்கு அல்லது மீள அமைவிடம் அளிப்பதற்கு அல்லது கிளை அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்கு குத்தகைக்கு விடப்படுகின்றவிடத்து 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து சர்வதேச வர்த்தக தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வெளிநாட்டுக் கம்பெனிக்கு விலக்களிக்கலாம்

குத்தகைச் சாசனத்தை பதிவு செய்தலின் மீதான நிபந்தனைகள்.

**8.** (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு அல்லது கம்பெனி ஒன்றிற்கு ஏதேனும் காணியினை குத்தகைக்கு விடுகின்ற குத்தகை ஒப்பந்த உறுதிமுறியானது, காணிகள் பதிவாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க குத்தகை தொடர்பில் காணிக் குத்தகை வரியானது செலுத்தப்பட்டுள்ளது எனத் திருப்திப்பட்டாலன்றி, ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவு செய்யப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "காணிகள் பதிவாளர்" என்பது, எக்காணிப் பதிவகத்துக்கு குத்தகை ஒப்பந்த உறுதிமுறி பதிவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காணிப் பதிவகத்தின் முறையான காணிப் பதிவாளர் எனப் பொருள்படும்.

வலுவுக்கிடல்.

**9.** (1) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி, 6 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட காணிக் குத்தகை வரியை விதித்தலும், அறவிடுதலும் மற்றும் சேகரித்தலும் வேண்டும்.

(2) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான காணிக் குத்தகையினை வலுவுக்கிடுவதற்கும், மற்றும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

காணிக் குத்தகை வரி திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**10.** உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் 9 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்படும், அறவிடப்படும் அல்லது சேகரிக்கப்படும் காணிக் குத்தகை வரியானது திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

எந்தக் காணிகளின் உரித்து வெளிநாட்டவருக்கு மாற்றப்பட்டதோ அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதோ அந்தக் காணிகளை குத்தகைக்கு விடுதல் மீதான மட்டுப்பாடுகள்.

**11.** (1) எந்தத் தேதியன்று இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியின் பின்னர் 2 (1) ஆம் பிரிவில் அல்லது 5 (1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவருக்கு அல்லது கம்பெனி ஒன்றிற்கு கைமாற்றப்பட்ட அல்லது குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணி ஏதேனும் நோக்கத்திற்காக, இயைபான கைமாற்றச் சாசனம் அல்லது குத்தகைச் சாசனத்தின் நிறைவேற்றத்திலிருந்து பயனுறும் 5 ஆண்டுகள் காலப்பகுதிக்கு வங்கித் தொழிற்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வங்கி ஒன்றில் ஈடு வைக்கப்படுதலோ அல்லது அடைமானம் வைக்கப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவினை மீறி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஈட்டுக்கடன் அல்லது அடைமானம் வறிதாதல் வேண்டும்.

*காணிச் சீர்திருத்தச் சட்டமானது விலக்களிக் கப்பட்ட கைமாற்றல்கள் மற்றும் குத்தகைகள் தொடர்பில் ஏற்புடையதாதல்.*

**12.** எவரேனும் ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படக் கூடியதான காணியின் ஆகக்கூடிய விஸ்தீரணத்தின் மீது 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் ஏற்பாடு கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்பட்ட காணியின் ஏதேனும் உரித்து மாற்றம் அல்லது குத்தகை தொடர்பில் தொடர்ந்தும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*பெறுமதி மதிப்பிடல்.*

**13.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக,-

(அ) ஏதேனும் அரச காணியின் காணிப் பெறுமதியானது அரசாங்க பிரதம பெறுமதி மதிப்பீட்டாளரால் தீர் மானிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் தனியார் காணியின் காணிப் பெறுமதியானது உரிமம்பெற்ற பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(2) ஐந்தாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குத்தகை ஒன்று தொடர்பாக மொத்தக் குத்தகை வாடகை (1) ஆம் உட்பிரிவில் ஆக்கப்பட்ட காணியின் பெறுமதி மதிப்பிடலை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுதல் வேண்டும்.

*தவறுகளும் தண்டனைகளும்.*

**14.** (1) இச்சட்டத்தின்கீழ் காணிக் குத்தகை வரியைச் செலுத்து வதற்கு ஆளான எவரேனும் ஆள் அத்தகைய வரியைச் செலுத்து வதற்குத் தவறுகின்றவிடத்து, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப் பட்டவாறு இச்சட்டத்தின்கீழ் வரி தவணை தவறுகையாளர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய எவரேனும் தவணை தவறுகையாளர் இச்சட்டத் தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், உண்ணாட்டர

சிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவரேனும் அத்தகைய தவணை தவறுகையாளருக்கு எதிரான வழக்குத் தொடுப்புக்கும், அது தொடர்பிலும் அத்துடன் அத்தகைய வரியின் அறவிடலுக்கும் அதனது தண்டனைக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினால் புரியப்படும் தவறுகள்.

**15**. இச்சட்டத்தின்கீழ் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அவ்வாட்கள் குழு -

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, அக்கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும் ; அல்லது

(ஆ) ஒரு குழுமமாகவிருக்குமிடத்து, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ; அல்லது

(இ) ஒரு குழுமம், தவிர்ந்த வேறு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருக்குமிடத்து, அதனது முகாமைக்கும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்புடையவரான அக்குழுவின் ஒவ்வொரு அலுவலரும்,

அத்தகைய தவறிற்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயினும் அத்தகைய ஆள் எவரும், அவர் அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாத முறையில் புரியப்பட்டிருந்தது எனவும், அவர் அத்தகைய தவறு புரிகையைத் தடுப்பதற்கு எல்லா உரிய விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் எனவும் எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப் படுதலாகாது.

அபிவிருத்திக் கருத்திட்டங் களுக்கான சலுகைகள்.

**16**. எந்தக் கருத்திட்டத்திற்கு அரச காணியின் இறையிலி உரிமை அல்லது குத்தகைப் பற்றுரிமை கைமாற்றப்படவுள்ளதோ அந்த அபிவிருத்தி கருத்திட்டமொன்றாக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டம் ஒன்றுக்கு அரச காணியொன்று

கைமாற்றப்படுகின்றவிடத்து, 13 ஆம் பிரிவின்கீழ்த் தீர்மானிக்கப்பட்ட காணிப்பெறுதி அல்லது மொத்தக் குத்தகை வாடகை என்பவற்றின் இருபத்தைந்து சதவீத கழிப்பனவு தொகை ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் :

ஆயினும், அத்தகைய அபிவிருத்திக் கருத்திட்டம் -

(அ) இலங்கைப் பிரசை ஒருவரினால் ; அல்லது

(ஆ) கம்பெனியொன்றின் பங்கு வைத்திருக்கையின் ஐம்பது சதவீதம் அல்லது அதற்குமேல் இலங்கைப் பிரசைகளினால் வைத்திருக்கப்படுகின்றவிடத்து, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றினால்,

நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**17.** (1) அமைச்சரானவர் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காகவும் மற்றும் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்களுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய பின்னரான தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதனது வெளியீட்டுத் தேதிக்குப் பின்னர் இயன்றவரை விரைவாக அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று ஒழுங்குவிதி ஒன்று இல்லாதொழிக்கப் பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண் டும்.

*இச்சட்டத்தினை மீறிச் செய்யப்பட்ட காணி பராதீனப்படுத் தல் வெற்றும் வறிதும் ஆதல்.*

**18.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிச் செய்யப்பட்ட ஏதேனும் காணிப் பராதீனப்படுத்துதலானது வெற்றும் வறிதாதலும் வேண்டும் என்பதுடன், சட்டத்தில் பயனில்லாதாதலும் வேண் டும்.

*1963 ஆம் ஆண் டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் VI ஆம் பாகத்தினை நீக்குதல்.*

**19.** 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் VI ஆம் பாகமானது (குறித்தசில நிபந்தனைகளின்கீழ் ஆதனக் கைமாற்றங்களின்மீது வரியினை விதித்தல்) இத்தால் நீக்கப்படு கின்றது.

*ஐயங்களைத் தவிர்த்தல்.*

**20.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக -

(அ) 2013 சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் நிறைவேற்றப் பட்டிருந்ததும் ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு முடிவுறாதிருந்ததுமான 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு அல்லது கம்பெனி ஒன்றிற்கு இலங்கையில் காணி ஒன்றின் சொத்தாண்மையை கைமாற்றம் செய்கின்ற ஏதேனும் சாசனம் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் VI ஆம் பாகம் நீக்கப்பட்டமை, எது எவ்வாறிருப்பினும், அச்சட்டவாக்கத்தின் நீக்கப்பட்ட VI ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் எனவும் ;

(ஆ) 2013 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் காலப்பகுதியினுள் நிறைவேற்றப்பட்டதும் எந்தத் தேதியானது சபாநாயகரின் சான்றிதழ் இச்சட்டம்

தொடர்பில் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியன்று முடிவுறுகின்றதுமான 2(1) ஆம் பிரிவில் அல்லது 5(1) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவருக்கு அல்லது கம்பெனி ஒன்றிற்கு இலங்கையில் காணியை பராதீனப்படுத்தும் ஏதேனும் சாசனம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இயைபான காணிப் பதிவாளரினால் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் எனவும்,

இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

செல்லுபடியாக்குதல்.

**21.** 2013 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் எந்தத் தேதியன்று இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியொன்றுக்கு இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு காணிக் குத்தகை வரியை விதிக்கின்றவரான அல்லது சேகரிக்கின்றவரான உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி முறையான அதிகாரத்துடன் செயற்பட்டிருப்பதாக அல்லது செயற்பட்டுக்கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகயை விதிப்பனவு அல்லது சேகரிப்பானது வலிதாக மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் மேற்கொள்ளப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

காணிக் குத்தகை வரியாகச் செலுத்தப்படற்பாலதாக உள்ளபடியான தொகைக்கும் வரியாகச் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டை அறவிடுதல்.

**22.** இருபத்தோராம் பிரிவின்கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட காணிக் குத்தகை வரியின் தொகை 6 ஆம் பிரிவின்கீழ் குத்தகை எடுத்தவரால் செலுத்தப்படற்பாலதான காணிக் குத்தகை வரியின் உள்ளபடியான தொகையிலும் குறைவாக உள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி காணிக் குத்தகை வரியாக செலுத்தப்படற்பாலதான உள்ளபடியான தொகைக்கும் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட தொகைக்கும் இடையிலான வேறுபாட்டை, அறிவிப்புத் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தும்படி அத்தகைய குத்தகையை எடுத்தவரை எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துதல் வேண்டும்.

*காணிக் குத்தகை வரியாக செலுத்தப்பட்ட விஞ்சுதலான தொகையை மீளச் செலுத்துதல்.*

**23.** (1) இருபத்தோராம் பிரிவின்கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட காணிக் குத்தகை வரியின் தொகை 6 ஆம் பிரிவின்கீழ் குத்தகைக்கு எடுப்பவரொருவரால் செலுத்தப்படற்பாலதான காணிக் குத்தகை வரியின் உள்ளபடியான தொகையினை விஞ்சுவதாக உள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி விஞ்சுதலான தொகையை செலுத்தியுள்ள ஆளொருவரினால் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பமொன்றின்மீது, அவ்வாளுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட விஞ்சுதலான தொகையை மீளச் செலுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சுதலான தொகை விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து ஆறு மாதங்களுள் விண்ணப்பதாரருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**25.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"பராதீனப்படுத்தல்" என்பது இலங்கையினுள் அமைந்துள்ள காணிகளை கைமாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது ஈடுவைத்தல் எனப் பொருள்படும் ;

"இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"வங்கித் தொழிற் சட்டம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம் எனப் பொருள்படும் ;

"பிரசாவுரிமைச் சட்டம்" என்பது, (349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"இலங்கைப் பிரசை" என்பது பிரசாவுரிமைச் சட்டத்தின் நியதிகளின்படி இலங்கைப் பிரசை ஒருவர் எனப் பொருள்படும் ;

"கம்பெனிகள் சட்டம்" என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் எனப் பொருள்படும் ;

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம்" என்பது 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டம் எனப் பொருள்படும் ;

"வெளிநாட்டவர்" என்பது இலங்கைப் பிரசை ஒருவராக அல்லாத ஆள் ஒருவர் எனப் பொருள்படும் ;

"வெளிநாட்டுக் கம்பெனி" என்பது, இலங்கை தவிர்ந்த ஏதேனும் நாட்டின் சட்டங்களின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றும் அல்லது ஆட்கள் குழுமமொன்று எனப் பொருள்படும் ;

"நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டம்" என்பது 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டம் எனப் பொருள்படும் ;

"நிதிக் குத்தகை நிறுவனம்" என்பது நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனம் ஒன்று எனப் பொருள்படும் ;

"கொளிக் கம்பெனி" ஆனது கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது ;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"காணி" என்பது -

(அ) காணியில் உள்ள ஏதேனும் அக்கறை ;

(ஆ) நீரால் மூடப்பட்ட ஏதேனும் காணி ; அத்துடன்

(இ) அக்காணியில் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் வீடு அல்லது கட்டிடங்கள்,

என்பவற்றை உள்ளடக்குகின்ற ஏதேனும் அரச அல்லது தனியார் காணி எனப் பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படும் ;

"கைமாற்றம்" என்பது ஏதேனும் விற்பனை, நன்கொடை, கொடை அல்லது ஏதேனும் மாற்றளிப்பு என்பதனால் அல்லது என்பதன்கீழ் அத்தகைய காணியின் உரித்து வேறொரு ஆளுக்கு செல்லுகின்றதோ அந்த விற்பனை, நன்கொடை, கொடை அல்லது மாற்றளிப்பு எனப் பொருள்படும் ;

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக் கப்படாத ஆட்களின் குழு ஒன்றை உள்ளடக்கும் ;

"ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டம்" என்பது, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்;

"துணைநிலைக் கம்பெனி" என்பது கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்பிற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்